*அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 30/2017*

எனது இலக்கம் : EST-7/ALOWN/06/0719/21/(VII)
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2017.12.05

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>நேர்முகப்பரீட்சைச் சபைகளில் உறுப்பினர்களாகவும், உதவி அலுவலர்களாகவும் பணியாற்றியமைக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகள்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2008.12.22 ஆந் திகதிய மற்றும் 24/2008 இனைக் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பால் உமது அவதானத்திற்கு கொண்டு வருகின்றேன். அதில் குறிப்பிட்டுள்ள கொடுப்பனவு 2018.01.01 ஆந் திகதி முதல் கீழ்வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| I | பதவிநிலை தரப் பதவிக்காக தகுதியுடையவர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றின் ஒவ்வொரு உறுப்பினருக்கும். | - | ஒரு நபரை நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்துவதற்காக ரூபா. 75.00 (எழுபத்தைந்து) |
| II | பதவிநிலைத் தரமொன்றினுள், ஒரு தரத்தில் இருந்து இன்னொரு தரத்திற்கு பதவியுயர்த்து வதற்காக தகுதியுடையவர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்படும் நேர் முகப் பரீட்சை சபையொன்றின் ஒவ்வொரு உறுப்பினருக்கும். | - | ஒரு நபரை நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்துவதற்காக ரூபா. 55.00 (ஐம்பத்தைந்து) |
| III | பதவிநிலை தரமற்ற பதவியொன்றுக்கு தகுதியுடையவர்களை தேர்ந்தெடுப்பதற்காக மற்றும் பதவிநிலையற்ற தரத்தினுள் பதவியுயர்த்துவதற்காக தகுதியுடையவர்களை தேர்ந்தெடுக்கும் வகையில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றின் ஒவ்வொரு உறுப்பினருக்கும். | - | ஒரு நபரை நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்துவதற்காக ரூபா. 30.00 (முப்பது) |
| IV | ஆரம்ப தரத்தில் உள்ள பதவியொன்றுக்கு தகுதியுடையவர்களை நியமிப்பதற்காக அல்லது ஆரம்ப தரத்தினுள் பதவியுயர்த்துவதற்காக தகுதியுடையவர்களை தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை சபையொன்றின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் | - | ஒரு நபரை நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்துவதற்காக ரூபா.15.00 (பதினைந்து) |

02. கிழமையின் வேலை நாட்களில் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சைச் சபையின் உறுப்பினர்களுக்கான மேற்குறிப்பிட்ட துண்டுக்கூலி அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கும் போது ஒரு உறுப்பினருக்கு கிடைக்கப்பெறும் மொத்தக் கொடுப்பனவு ரூபா. 750.00 இனை விட குறைவாக இருந்தால் அச்சபையின் உறுப்பினர்களுக்கு துண்டுக்கூலி அடிப்படையில் செலுத்தாமல் நாளொன்றுக்கு ரூபா. 750.00 என்ற வகையில் கொடுப்பனவினை செலுத்துவதற்கு முடியும்.

03. வார இறுதி நாட்களில் அல்லது அரசாங்க விடுமுறை தினங்களில் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சைக்காக மேற்குறிப்பிட்ட முதலாம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள துண்டுக்கூலி அடிப்படையில் செலுத்துவதற்கு மேலதிகமாக 2013.10.09 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 21/2013 இன் ஏற்பாடுகளுக்கு அமைய அலுவலருக்கு உரித்துடைய விடுமுறை நாட்களுக்கான சம்பளமும் வழங்க முடியும்.

04. மேற்கூறப்பட்ட 03 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள கொடுப்பனவிற்கு உரித்துடைய நேர்முகப்பரீட்சைச் சபை அலுவலர்களுக்கு 02 ஆம் பந்தியின் கீழ் குறிப்பிட்டுள்ள கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறுவதற்கு உரித்துடமை கிடையாது.

05. **நேர்முகப்பரீட்சைச் சபைகளின் உதவிபுரிகின்ற அலுவலர்களுக்கான படிகள்.**

வார இறுதி நாட்கள் மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சைச் சபையின் உதவிக் கடமைகளுக்காக பங்குபற்றும் அலுவலர்களுக்காக கீழ்வரும் வகையில் படி வழங்க முடியும். இக்கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக எவ்வித படியும் இவ்வலுவலர்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

| | **அலுவலர்களின் வகுதி** | **நேர்முகப்பரீட்சைச் சபையில் உள்ளடக்கப்படும் உதவி பணியாட்தொகுதியினரின் உச்ச் எண்ணிக்கை** | **ஒரு நாளுக்குரிய உச்சப் படி** |
|---|---|---|---|
| I. | பதவிநிலை அலுவலர்கள் | 01 | 2013.10.09 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 21/2013 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க விடுமுறை தினப் படி அல்லது ரூபா.1400/- (ஆயிரத்தி நாநூறு) |
| II. | அரசாங்க முகாமைத்திவ உதவியாளர் சேவையும் அதனுடன் சமனான தரங்களும் | 02 | ரூபா. 800/- (எண்ணூறு) |
| III. | அலுவலகப் பணியாளர் சேவை | 01 | ரூபா. 500/- (ஐநூறு) |
| IV. | சாரதிகள் | 01 | ரூபா. 500/- (ஐநூறு) |

06. இந்த சுற்றறிக்கை பொது திறைசேரியின் ஒத்திசைவுடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு